தலைப்பு 259 – மாத்தளை மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 259 – மாத்தளை மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மாத்தளை மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியவற்றுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக் கூடும். எனது அறிக்கை மாத்தளை மாவட்ட செயலகத்தினதும் பாராளுமன்றத்தின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	திறைசேரி அச்சிட்டு படிவத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் கட்டிடங்களின் அகற்றிய மொத்தம் ரூபா 813,810,661 ஆகவும், எஸ்ஏ-81 காணி கையேற்றல் மொத்த தொகை ரூபா 2,484,885,000 ஆகவும் இருந்த போதிலும், கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட மாவட்ட செயலகத்தின் திரட்டிய பரீட்சை மீதியில் அதே பெறுமதி குறிப்பிடப்படவில்லை மற்றும் இயந்திரங்கள் ரூபா 773,171,897 ஆகவும், நடைமுறை வேலை ரூபா 542,487,542 ஆகவும் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.	பரீட்சிக்கப்பட்ட திணைக்கள புத்தகங்களுக்கும் திறைசேரிப் பதிவேடு களுக்கும் இடையிலான வேறுபாட்டைச் சரிபார்த்து சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	முறையாகச் பரீட்சித்து திணைக்களப் பதிவேடு களுக்கும் திறைசேரிப் பதிவேடுகளுக்கும் இடையிலான வேறுபாட்டை சரிசெய்ய வேண்டும்.

(ii)	ஏசீஏ-2(i) திட்டங்களின் கீழ் செலவின அறிக்கையில் மீளாய்வாண்டில் ரூபா 63,507,202 பெறுமதியான நிதி அல்லாத சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த கொள்வனவுகள் எஸ்ஏ - 82 திறைசேரி அச்சீட்டுப் படிவத்தில் கொள்வனவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை.	பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	திணைக்களப் புத்தகங்களுக்கும் திறைசேரிப் புத்தகங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை சரிசெய்ய வேண்டும்.
(iii)	மாவட்டச் செயலகத்தில் சூரிய சக்தி முறைமையை நிறுவுவதற்கு ஏற்பட்ட ரூபா 11,598,279 செலவு மூலதனமாக்கப்பட்டு திரட்டிய பரீட்சை மீதியில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	சூரிய சக்தி முறைமைக்காக ஏற்பட்ட ரூபா 11,598,279 தொகை 123-2-15-82-2506 செலவின விடயத்தின் கீழ் செய்யப்பட்டதுடன் அது அபிவிருத்தி மானியங்களின் கீழ் வருவதால் மூலதன மாக்கப்படவில்லை என்பதாக. திறைசேரியின் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	

(ஆ) பதிவேடுகள் மற்றும் பதிவேடுகளை பராமரிக்காமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் இணைப்பு (ii) – புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப் பட்டமை தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்ட மீளாய்வாண்டில் நிதிப் பிரமாணம் 109 இன் கீழ் அறவிடப்பட்ட 03 பிரதேச செயலகங்களில் இடம்பெற்ற ரூபா 276,950 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 110 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேட்டில் பதிவு செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தவறு ஒன்று காரணமாக அதனை நாளதுவரையாக்க முடியவில்லை என்பதாக	நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதப் பதிவேட்டை நாளதுவரையாக பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன

3. நிதி மீளாய்வு

3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத உப கட்டுநிதி மிதி ரூபா 9,129,896 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் ஏசிசீ - 3 படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2024 ஆம் ஆண்டிற்கான கட்டுநிதி கணக்கு தொடர்பான கூற்றில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறுவன புத்தகத்தின் பிரகாரம் கட்டுநிதி மீதியொன்று இல்லை என குறிப்பிடப்பட்டிருந்தது.	2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறுவனத்தின் புத்தகத்தின் பிரகாரம் கட்டுநிதி மீதி ரூபா 9,129,896 ஆக இருக்க வேண்டும் என்பதாக.	கட்டுநிதிக் கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக் கூற்றின் பிரகாரம் மற்றும் எஸ்ஏ - 92 திறைசேரி அச்சிட்டு படிவத்தின் பிரகாரம் மீதிகளில் ரூபா 1,009,850 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது.	எஸ்ஏ - 92 படிவத்தின் திறைசேரி அச்சிட்டு குறிப்பில் 2025 ஜனவரி 31 ஆந் திகதியில் உள்ள வாறான சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப் பட்ட பொறுப்புக்களாக இருந்ததுடன் 2025 ஜனவரி 31 பின்னர் அறிக்கை இடப்பட்ட திறைசேரி அச்சீட்டு படிவத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதாக.	பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு தாமதமின்றி சிகாஸ் திட்டத்திற்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

	அவதானிப்புக்கள்				
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணக்கமின்மை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1907 இன் 16 ஆம் இலக்க வன பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் 64(2)(ஊ) பிரிவின் பிரகாரம் (451 ஆம் அதிகாரம்) பிரகாரம் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அமைச்சரால் தயாரிக்கப்பட்ட கட்டளை இலக்கம் மற்றும் 2021 பிப்ரவரி மாதம் 25 ஆம் திகதிய 2216/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி	20,075,375	மாத்தளை மாவட்டத்தின் அரச காணிகளில் அமைந்துள்ள கருங்கல் எடுக்கும் வேலைத்தளங்களில் இருந்து 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டிய காட்டு உற்பத்தி கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்க வில்லை.	உரிய நிலுவை கட்டணங்களை அறவிடும் நடவடிக்கை கள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருவதாக	உரிய காலத்தில் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத உத்தியோகத்தர் கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் வர்த்தமானியின் பிரகாரம் காட்டு உற்பத்திகளுக் கான கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2016 இன் 08 ஆம் இலக்க ஆட்பதிவு சட்டத்தின் 5 ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட 1968 இன் 32 ஆம் இலக்க ஆட்பதிவு சட்டத்தின் 2 ஆம் பிரிவு	-	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாவட்டத்தின் 9 பிரதேச பிரதேச செயலாளர் பிரிவுகளின் 195 கிராம சேவை பிரிவுகளில் 15 வயது பிந்திய 1139 நபர்களுக்கு தேசிய அடையாள அட்டை காணப்படவில்லை.	கிராம சேவையாளர் ஊடாக உரிய அறிவுறுத்தல் கள் மேற்கொள்ளப் படுவதாக.	விரைவான வேலை திட்டமொன்றை ஈடுபடுத்தி அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை				
	(i) நிதி பிரமாணம் 104(1)(அ) பந்தி	-	யட்டவத்த பிரதேச செயலகத்தின் வாகனம் ஒன்று 2024 ஜூலை 10 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டு இருந்த போதும் நிதி	குறித்த காலப்பகுதி தேர்தல் காலமாக இருந்ததால் தாமதமாக இருந்த போதும்	உரிய நேரத்தில் பரிசோதனைக் குழு நியமிக்கப்படாம ல் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு முன்

	பிரமாணங்களின் பிரகாரம் பரிசோதனை சபையொன்று நியமிப்பதற்கு நியமித்தல் 2024 ஒக்டோபர் 16 ஆம் திகதி வரை தாமதிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் அவ்வாறான தாமதம் ஒன்று இடம்பெறாமல் தவித்துக் கொள்வதாக.	பரிசோதனையை விரைவில் மேற்கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii) நிதிப் பிரமாணம் - 104(4)	நிதி பிரமாணங்களின் பிரகாரம் நட்டம் இடம் பெற்ற திகதி முதல் மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பிரதேச செயலகத்தின் கெப் வண்டியொன்று 2024 ஏப்ரல் 11 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டமை தொடர்பாக 2025 ஜனவரி 31 ஆம் திகதி வரை கணக்காய்வு திகதி வரையிலும் விபத்து இடம்பெற்று 09 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் நட்டம் சேதங்கள் தொடர்பாக பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நீதிமன்ற கட்டளையின் பிரதி ஒன்று தேவையாக இருப்பதால் அது இது வரை கிடைக்கவில்லை எனவும் கிடைத்ததன் பின்னர் அறிக்கையை விரைவில் வழங்குவதாகவும்	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கும் நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) நிதிப் பிரமாணம் 137 (5) இன் பிரகாரம் வழங்கல் தெடர்பான சந்தர்ப்பங்களில் அவை பரீட்சிக்கப்பட்டு சரியாக	2025.03.24 ஆந் திகதி குறித்த கதிரைகள் கிடைத்திருந்ததாகவும் 2025 மார்ச் 26 ஆம் திகதி	முறையற்ற வகையில் நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை

பொறுப்பேற்ற பின்னர் கொடுப்பனவு உறுதிச்சிட்டை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் வில்கமுவ பிரதேச செயலகத்தினால் தனியார் நிறுவன மொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கூட்ட மண்ட கதிரைகளுக்காக 2024 திசெம்பர் 27 ஆந் திகதி ரூபா 365,421 ஆன கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2025 மார்ச் 03 ஆந் திகதி வரையிலும் அப்பொருட்கள் குறித்த வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	உள்ளவாறு கொடுப்பனவு காசோலை உரிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக	எடுப்பதற்கும் தாமதம் இன்றி பொருட்களை கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) மாத்தளை பிரதேச செயலாளருக்குரிய கெப் வண்டியொன்றின் எரிபொருள் எரிவு தொடர்பான முறைகேடு காரணமாக 2022 திசெம்பர் மாதம் 29 ஆம் திகதி சாரதியிடம் இருந்து அறவிடப்பட்ட ரூபா 28,290 தொகை 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக உரிய பரிசோதனை விரைவில் பூர்த்தி செய்யப்படாமையால் பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	உரிய பரிசோதனை அறிக்கை கிடைத்துள்ளதால் அம்மீதியை அரசின் வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக	உரிய பரிசோதனைகளை விரைவில் பூர்த்தி செய்து பொது வைப்புக் கணக்கில் மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும்

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்த்த விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2020 பெப்ரவரி 20 ஆம் திகதிய 2020/06 ஆம் இலக்க இலங்கை சமூர்த்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பொருளாதாரப் பலப்படுத்தல் செயற்திட்டங்களுக்காக வாழ்வாதார நிகழ்ச்சி திட்டத்தின் மூலம் சலுகை கடன் வழங்கும் புதிய திருத்தத்தை செயற்படுத்துவது தொடர்பாக	கடன்களை பெற்ற 8 பேரில் ஒருவர் கொடுப்பனவு செய்து பூர்த்தி செய்துள்ளாகவும் விடுவதற்கு அறிவுறுத்தி உள்ளதாகவும்	முறையான கண்காணிப் பொன்றை மேற்கொண்டு உரிய காலத்தில் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் கடனை மீள

சுற்றறிக்கையின் பிரகாரம் ரத்தொட்டை மற்றும் வில்கமுவ உள்ள 06 சமூக வங்கிகளின் 27 கடன்பெற்றோர்களிடமிருந்து ரூபா 384,389 ஆன நிலுவை கடன் தொகையொன்று 01 மாதம் முதல் 05 மாதங்கள் வரையான காலம் அறவிப்படாமல் காணப்பட்டது.		அறவிடுவதற்காக நடைமுறையொன்று தயாரிக்கப்படவும் வேண்டும்.

4.2 எதிர்பார்த்த நலன்களை (Outcome) அடைந்து கொள்ளலாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் நிதி ஏற்பாட்டின் பேரில் வெளிநாடு சென்றுள்ள பெண்களுக்காக மாற்று வருமான உழைப்பு வழிச் செயற்திட்ட நிகழ்ச்சிகளின் கீழ் பதிக் கைத்தொழிலுக்குரிய நலனாளி ஒருவருக்காக ரூபா 25,000 ஆன செலவினம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதும் இச்செயற் திட்டத்திற்காக நலனாளிகள் தெரிவு செய்யப்பட்ட நியதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	வெளிநாடு செல்வதற்கு எதிர்பார்த்து இருந்துள்ளதாக.	செயற்திட்டத்திற்காக நலனாளிகளை தெரிவு செய்யும் போது நியதிகளை இனங் கண்டு அதன் பிரகாரம் வெளிப்படையாக தீர்வு செய்தல் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4.3 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2007 ஆம் ஆண்டில் தேசிய சவிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்மொழிபட்ட மற்றும் 2007 செப்டம்பர் 17 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த பத்கம்பல அரிசி தயாரிக்கும் திட்டத்தின் திட்டம் கணக்காய்வு தெரியாத 2025 மார்ச் 03 ஆம் திகதி வரையிலும் 18 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றாமல் விளைவற்று காணப்பட்டது.	நீண்ட காலமாக குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தேவையான வேண்டுகோள் கடிதங்கள் காணி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் மேலதிக கலந்துரையாடல்களுக்காக லக்கல பல்நோக்கு சேவை கூட்டுறவு சங்கத்தின் பொது முகாமையாளர் அழைக்கப்பட்டுள்ளதாக.	முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு செயற்திட்டத்தை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுப்பதற்கும் விரைவான வேலை திட்டம் ஒன்றை ஈடுபடுத்தி சேர்த்து திட்டத்தை செயல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 பெறுகை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.3 (இ) பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் போதிய அளவில் இருக்கும் போது அவர்களிடமிருந்து விலை கோரல் பெற்றுக் கொள்ளாமல் அதற்காக விடயங்களை தெரிவிக்காமல் மாத்தளை மாவட்ட செயலகத்தினால் உலக உணவு நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்ட செயற்திட்டத் திற்காக தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 9,149,175 தொகையும் மாத்தளை அலுவிகார உடற்பயிற்சி நிலையத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 14,158,466 தொகை செலவிடப்பட்டிருந்த துடன் கொள்வனவு செய்யப்பட்ட உடற் பயிற்சி உபகரணங்கள் தொழில்நுட்ப விவரக்குறிப்பு களுக்கு இணங்க இருக்கவில்லை.	பெறுகை வழிகாட்டல் கோவையில் 2006 மேலதிகம் 40 மற்றும் 2006 மேலதிகம் 40 இன் 3.4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளதாக.	முறையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு பெறுகை வழிகாட்டல் களுக்கு முரணாக நடவடிக்கை எடுத்துள்ள தரப்பினருக்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்ட செயலகத்திற்குரிய 5 வாகனங்கள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்று காணப்பட்டன.	கைதவிர்ப்பதற்கு தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	செயற்திறனை பரீட்சித்து திருத்தங்களை மேற் கொண்டு பயன்படுத்து வதற்கு அல்லது முறைப்படி கை தவிர்க்கப்பட வேண்டும்.
(ஆ)	அம்பன் கங்கை கோரளை பிரதேச செயலகத்திற்குரிய கட்டிடம் ஒன்று குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது டன் கலேவல பிரதேச செயலகத்துக்குரிய குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கட்டிடம் ஒன்று 2015 ஆம் ஆண்டு முதல் குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை.	கட்டிடத்தின் மண் வரி சுவர்களுக்கு கரையான் அவ்வப்போது சேதம் விளைவிப்பதாகவும் பயன்படுத்தற்கு முடியுமான ஒரு பகுதியை விலங்குகள் சேதம் ஏற்படுத்தாத உருப்படிகளை களஞ்சியப் படுத்தபட்டுள்ளதாக.	குறை பயன்பாட்டுடைய சொத்துக்களை முழுமையாக பயன்படுத்தும் வேலை திட்டம் ஒன்றுக்கு ஈடுபடுத்துவதற்கும் குத்தகை வாடகையை விரைவில் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.6 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(ஆ)	நிதிப் பிரமாணம் 881(1) மற்றும் 2019 மார்ச் 23, ஏப்ரல் 09 ஆம் திகதிய 07/2019 ஆம் இலக்க உள்நாட்டு அலுவலகள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளரின் அரச உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை அறவிடுவது தொடர்பான சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் ரத்தொட்டை பிரதேச செயலகத்தில் சேவை புரிந்த 04 உத்தியோகத்தர்கள் இடமிருந்து ரூபா 11,500 ஆன பிணைத் தொகை பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	புதிய கணக்குகள் திறக்கப்படுவதற்கும் பிணை வைப்புகள் பாஸ் புத்தகங்களை அலுவலகத்திற்கு கொண்டு வந்து பிணைத்தொகை வைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	நிதி பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புகளை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4.7 நட்டங்களும் சேதங்களும்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் அரசின் காணி கையேற்பு கட்டளை சட்டத்தின் 361 ஆம் பிரிவின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் 38 (அ) உப கட்டளையில் வெளியிடப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை கொடுப்பனவு தாமதமான காரணத்தினால் வீதி அபிவிருத்தி செய்வதற்கு மாத்தளை மற்றும் யட்டவத்த பிரதேச செயலக அதிகார பிரதேசங்களில் அமைந்துள்ள 40 காணி துண்டுகளுக்காக ரூபா 39,163,641 ஆன வட்டி கொடுப்பனவொன்று செய்யப்பட்டிருந்தது.	காணி கையேற்றல் சட்டத்தின் பிரகாரம் 38(அ) உப கட்டளைகளின் கீழ் கட்டளை வழங்கப்பட்ட திகதி முதல் செய்யப்பட வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எடுக்கப்பட்டுள்ள காலத்திற்காக வட்டித் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டதாக.	கையேற்றல் நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்வதற்காக முறையான நடைமுறை ஒன்றும் திட்டமொன்றும் செயற்படுத்தப்பட வேண்டும்.

4.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதி பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் 2024 ஏப்ரல் 04 ஆந் திகதிய DFD/2024-1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.3.2 பந்தியில் குறிப்பட்டுள்ள பிரகாரம், ஒப்பந்தம் செய்யப்பட்ட அரிசியை கொள்வனவு செய்வதற்காக அரிசி ஆலை உரிமையாளர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளாமல் மூன்றாம் தரப்பினர் மூலம் அரிசி கொள்வனவு செய்து மூன்றாம் தரப்பினருக்கு அரிசிக்கு ரூபா 281,901,227 மற்றும் போக்குவரத்துச் செலவினமாக ரூபா 6,623,772 ஆகியவற்றை மாவட்ட செயலகத்தினால் ரூபா 288,524,999 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் பொருட்கள் வழங்கப்படுவதற்கு முன்பு எந்த ஒப்பந்தமும் செய்யப்பட்டிருக்கவில்லை.	மாவட்டத்தில் இருந்து மிகக் குறைந்த அளவிலான அரிசியையே வழங்க கூடியதாக இருந்ததாகவும் இந்தத் திட்டம் தீவு முழுவதும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால், இந்த நேரத்தில் அனைத்து மாவட்டங்களும் தங்கள் மாவட்டங்களுக்கு அரிசி வழங்கிய பிறகு மற்ற மாவட்டங்களுக்கு அரிசி வழங்க ஒப்புக் கொண்டதாகவும், அந்த நேரத்தில் அரிசி வழங்கிய மூன்றாம் தரப்பினருடன் எழுத்து மூலமான ஒப்பந்தம் எதுவும் செய்யப்படவில்லை என்றும், பின்னர் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்ட தாகவும்	முறையான விசாரணை நடத்தப்பட்டு நிதி முறைகேடு நடந்திருந்தால், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	503,260 கி.கிராம் அரிசி கொள்வனவு செய்வதற்கான ரூபா 94,581,030 மற்றும் ரூபா 2,435,981 போக்குவரத்துக் கட்டணங்களை கொடுப்பனவிற்காக பட்டியல்களை சமர்ப்பித்திருந்த அரிசி ஆலை யொன்று அக்கரைப்பற்றில் உள்ள முகவரியில் இல்லை என்றும், பிரதேச செயலாளர், கிராம அலுவலர் உட்பட் அக்கரைப்பற்றில் உள்ள ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் ஆகியோர் உறுதிப்படுத்தியதன் பிரகாரம், பணக் கொடுப்பனவின் வெளிப்படைத்தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தி அடைய முடியாதிருந்ததுடன் அரிசி ஆலையிலிருந்து 117,010 கிலோகிராம் அரிசி வழங்கப்பட்டதாக ரூபா 21,763,860 மற்றும் போக்குவரத்துச் செலவினமாக ரூபா 521,973	தெளிவான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டதாலும், அரிசியின் பொருத்தமான உரிய அளவுகள் கிடைத்ததாக பிரதேச செயலகங்களால் உறுதிப்படுத்தப்பட்டதால் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டதாக.	- மேற்படி -

	செலுத்தப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய அரிசி ஆலை உரிமையாளரின் கூற்றின் படி, அவர் 30,000 Kg அரிசியை மாத்திரம் அத்துடன் போக்குவரத்து செலவினம் ரூபா 120,000 ஐ அவர் செலவு செய்து போக்குவரத்து செய்துள்ளதாகவும், எனவே ரூபா 521,973 ஆன போலியான போக்குவரத்துச் செலவினமொன்று மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளபட்டிருந்தது.		
(இ)	நிதிப் பிரமாணம் 128(1) (ஐ) பிரகாரம் அரசாங்க செயற்பாடுகளை நிறைவேற்றும் போது எதிர்பார்த்த சிக்கனம் செயற்திறன் மற்றும் நேர்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தனது நிறுவனத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படு வதை குறிப்பாக உறுதி செய்வதும், செலவு செய்யப்பட்ட பணத்திற்கு உயர்ந்த பெறுமதியொன்று பெறப்படுவதை உறுதி செய்வதும் ஒரு கணக்கீட்டு உத்தியோகத்தராக மாவட்டச் செயலாளரின் பொறுப்பாக இருந்தாலும், ஒரு வெளித் தரப்பினருக்கு ஒரு கி.கிராம் அரிசிக்கு சுமார் ரூபா 10 வீதம் அளவும் மொத்தம் ரூபா 15,076,800 மேலதிக இலாபமொன்றை ஈட்டுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.	இந்தக் காலப்பகுதியில், அரசாங்கம் அரிசியின் விலைக்கு குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டு விலையையும் விட அதிகரித்ததால், சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கம் நிர்ணயித்த விலையில் அரிசியைப் பெறுவது கடினமாக இருந்ததால். அருகிலுள்ள பகுதிகளில் தேவையான அளவு அரிசி கிடைக்காததால், நிர்ணயிக்கப்பட்ட தரத்தின் பிரகாரம் அம்பாறை மற்றும் அக்கரைப்பற்று பகுதிகளிலிருந்து அரிசியைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்ததாக.	- மேற்படி -

4.8 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2013 ஜூலை 05 ஆந் திகதிய HAF-3-ADMIN-02-002 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளில் இருந்து அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதற்கு அரசாங்க காணிகள் (உடைமை மீட்பு)	ஒதுக்கப்பட்ட பகுதியை திட்டவட்டமாக அடையாளம் கண்டு, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு காணிச் கச்சேரியை விரைவில் நடத்துவதற்கும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	காணி ஆக்கிரமிப்பாளர்கள் மீது குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத மற்றும் செயற்படாத உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுத்து, சட்டத்தின் ஏற்பாடுளின படி உடனடியாக

	சட்டத்தின் கீழ் பிரதேச செயலாளரால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கலேவெல, வில்கமுவ, ரத்தோட்டை, அம்பங்கக கோரளை பிரதேச செயலகப் பிரிவுகளில் அரசாங்க காணிகளில் அங்கீகரிக்கப்படாத 13 ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	வில்கமுவ, மாத்தளை மற்றும் ரத்தோட்டை பிரதேச செயலக பிரிவுகளுக்குரிய சேர்ந்த 17 ஓய்வூதியம் பெறுவோருக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 4,140,182 தொகை, மீளாய்வாண்டின் இறுதி வரையில் இன்னும் அறவிடப்பட்டிருந்தது.	பல்வேறு காரணங்களுக்காக கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட ஓய்வூதியங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக	முறையான பரிசோதணை ஒன்றை நடத்திய பிறகு, கூடுதலாக பணம் செலுத்தியதற்காக உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருந்தால், அதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கும், கூடுதலாக கொடுப்பனவு செய்த ஓய்வூதியத்தை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	வில்கமுவ பிரதேச செயலகத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த போது 2023 ஆம் ஆண்டில் கட்டாய ஓய்வு பெற்ற ஒரு ஊழியரின் நிலுவையில் உள்ள கடன் மீதியான ரூபா 125,322 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் அரசாங்க அமைச்சுக்களுக்கு/ திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையில் உள்ள ரூபா 708,873 கடன் மீதியையும், பெற வேண்டிய கடன் முற்பணங்களின் கீழ் ரூபா 39,593 கடன் மீதியையும் 1-3 இடைப்பட்ட ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும், தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று பரிசோதனையொன்று நடத்தப்பட்டு வருவதால், ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்பதாகவும் ஒழுக்காற்று விசாரணை முடிந்த பிறகு வழங்கப்படும் தீர்மானங்களின் அடிப்படையில் எதிர்வரும் நடவடிக்கை எடுக்க முடியுமென்பதாக.	ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவின் போது நிலுவைத் தொகையை அறவிடுவதற்கும், மீதமுள்ள கடனுக்கான வட்டியை உடனடியாக அறவிவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 பொது மக்களுக்காக சேவைகளை நிறைவேற்றுதல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வில்கமுவ பிரதேச செயலகப் பகுதியில் அமைந்துள்ள ஒரு கருங்கல அகழ்வுத் தொழிலுக்கு பொதுமக்கள் பல சந்தர்ப்பங்களில் ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டிருந்தாலும், கருங்கல் வெடிப்பு / அகழ்வு செயற்பாட்டு நடவடிக்கை களுக்கான வெடிபொருட்கள் அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்காக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் 2023 திசெம்பர் 18 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1 "அ" படிவம் மூலம் பிரதேச செயலாளர் குடியிருக்கும் குடியிருப்பாளர் களிடமிருந்து பாறைகளைத் துளைப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று கூறி இரண்டு கருங்கல் கைத்தொழில் உரிமையாளர் களுக்கு சான்றிதழ் ஒன்றை வழங்கியிருந்தார்.	அனைத்து தொடர்புடைய நிறுவனங்கள், அனுமதிப் பத்திரங்களை டினாண்டிருப்போர் மற்றும் ஆட்சேபனை தெரிவித்த தரப்பினருடன் நடத்தப்பட்ட கூட்டுக் கூட்டங்களின் தீர்மானத்தின் பிரகாரமும், ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட தீர்மானத்தின் படியும், தொடர்புடைய படிவங்கள் மூலம் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளதாக.	முறையான பரிசோதணை ஒன்று நடத்தப்பட்டு, தவறான தகவல்களின் அடிப்படையில் படிவங்கள் நிரப்பப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் 2020 மே 15 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 (iv) பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் சேதங்களுக்காக நிதி வழங்குவதற்காக 2024 ஆம் ஆண்டில் 07 பிரதேச செயலகப் பிரிவுகளில் மதிப்பிடப்பட்ட 208 நலனாளிகளுக்கு ரூபா 2,768,760 இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிதி ஏற்பாடு கிடைப்பதில் தாமதம் இருந்ததாக.	முறைப்படி நடவடிக்கை எடுத்து அமைச்சிற்கு பெறுகைகளை கொண்டு வந்து சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்து சேதத்திற்கான இழப்பீடு வழங்குவதை விரைவுபடுத்த வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நாவுல பிரதேச செயலகத்திற்கு ஒரு மொழி மொழிபெயர்ப்பாளர் பதவி (சிங்கள - ஆங்கிலம்) அங்கீகரிக்கப்படாத போது, ஒரு மொழி மொழிபெயர்ப்பாளர் உத்தியோகத்தர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	அமைச்சின் மூலம் ஒரு உத்தியோகத்தர் இணைக்கப்பட்ட காரணத்தினால், அந்தப் பதவி பதவியணியினர் அறிக்கையில் மிகையாகக் காட்டப்பட்டுள்ளதாக	பணியாளர் மீளாய்வு ஒன்று நடத்தப்பட்டு பதவிகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் அல்லது மிகை உத்தியோகத்தர்களை பொருத்தமான பதவிக்கு இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2021 ஆகஸ்ட் 06 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க ஒன்றிணைந்த சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்றிணைந்த சேவைகளின் உத்தியோகத்தர் களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கையின் 2.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரே சேவை நிலையத்தில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவையை முடித்த உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், ரத்தோட்டை, அம்பன்கங்க கோரளை மற்றும் வில்கமுவ பிரதேச செயலகங்களில் பணியாற்றும் 66 உத்தியோகத்தர்கள் 05 முதல் 12 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் ஒரே சேவை நிலையத்தில் பணியாற்றிய போதிலும் அவர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	வருடாந்த இடமாற்றம் மற்றும் வருடாந்தம் அல்லாத இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும், வில்கமுவ பிரதேச செயலகம் போன்ற கஷ்டமான பிரிவுகளில் இடமாற்றங் களுக்கு முறையான நடைமுறை யொன்றைத் தயாரிப்பது பொருத்தமானது என்பதாக.	சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.